சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: திரு. வா. சுந்தரராஜ்,எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2023-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

இடை மனு எண்.03/2023

இன்

அசல் வழக்கு எண்.98/2018

....

சின்னையா ...மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர் /

விஸ்வநாதன்
(பவர் ஏஜெண்ட் சேது மூலம்) ...எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக 03.10.2023-ம் தேதியன்று வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.பழனிச்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞரின் வாதங்களை கேட்டும், மனு கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**உ த் த ர வு**

அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திருமதி.N.R.சரஸ்வதி, B.A.,B.L., அவர்களை சாட்சியாக விசாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 16, விதி 1 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2 . மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் : -**

எதிர்மனுதாரர் வாதியாக இருந்து மனுதாரர் மீது விளம்புகை, சுவாதீன மீட்பு, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள தாவா வழக்கில் தாவா சொத்தினைப் பார்வையிட்டு அறிக்கை

தாக்கல் செய்யும் வகையில் நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கக்கோரி இடை மனு எண்.270/2018 என்ற எண்ணில் தாக்கல் செய்த மனுவும் இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையாளராக வழக்கறிஞர் திருமதி.N.R.சரஸ்வதி, B.A.,B.L., அவர்கள் நியமிக்கப்பட்டார். மேற்படி நீதிமன்ற ஆணையாளரும் தாவா சொத்தை பார்வையிட்டு அவர் தாக்கல் செய்த வரைபடமும், அறிக்கையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்துள்ள அறிக்கையும், அதனுடன் தாக்கல் செய்துள்ள வரைபடமும் முரண்பட்டு காணப்படுகிறது. அதனால் மனுதாரர் தரப்பில் மேற்படி நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மீது ஆட்சேபணைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தாவா சொத்தின் அமைப்பு குறித்தும், ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தற்கும் உள்ள முரண்பாடுகளையும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவாக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திருமதி.N.R.சரஸ்வதி, B.A.,B.L., அவர்களை சாட்சியாக விசாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கி உத்தரவாக வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திருமதி.N.R.சரஸ்வதி, B.A.,B.L., அவர்களை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கி உத்தரவாக வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனுதாரரின் மனுவை அனுமதித்து உத்தரவிடவேண்டும்.

**3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுதாரர்/பிரதிவாதியானவர் 09.11.2006ம் தேதி 4-1/2 சென்டினை மட்டும் எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்தது போலவும் அதன்படி பட்டா மாறுதல் பெறாமல் சுமார் 4.94 சென்டிற்கு மோசடியாக பட்டா எண்.2587 வழங்கப்பட்டுள்ளது போலவும், நீதிமன்ற ஆணையரும் கிரையப்பத்திரப்படி அளக்காமல் பட்டா அடிப்படையில் தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்தது தவறு என்பது போலவும், எனவே நீதிமன்ற ஆணையரை விசாரிக்க வேண்டியது அவசியம் என்பது போலவும் கூறியுள்ள சங்கதிகளும் மறுக்கப் படுகின்றன.

முதலாவதாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.1 ஆவணத்தின் படி மனுதாரர்/பிரதிவாதியானவர் 09.11.2006ம் தேதி எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனார் சேதுவிற்கு நெற்குப்பை வருவாய் கிராம சர்வே எண்.129/4 புன்செய் மனையிடத்தில் ஏர்ஸ் 0.02.0 உள்ளதற்கு செண்ட் 4 -1/2 சதுரடி 1962 என குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி திருப்பத்துார் வட்டாட்சியரும் 20.04.2007-ம் தேதி மேற்படி மொத்த சொத்திலிருந்து சர்வே எண்.129/4ஐ உட்பிரிவு செய்து தாவா சொத்தான சர்வே எண்.129/4பி விஸ்தீரணம் 0.02.0 ஹெக்டேர் என கண்டுதான் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்துள்ளார். இதில் எந்த மோசடியும் நடைபெறவில்லை. மனுதாரர்/ பிரதிவாதி கிரையம் கொடுத்த வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் தாவா சொத்தின் விஸ்தீரணம் 0.02.0 ஹெக்டேர் என குறிப்பிட்டிருப்பதில் அதன்படி திருப்பத்துார் வட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்துள்ளார். பரப்பளவு கணக்கீட்டின்படி 0.02.0 ஹெக்டேர் என்பது 4.94 செண்ட் என்பது அனைவரும் அறிந்ததேயாகும். அதன் அடிப்படையில் தான் உபயதரப்பினர் முன்னிலையில் நெற்குப்பை வருவாய் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் அளந்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையாளர் அறிக்கைக்கும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையும் தாக்கல் செய்யப் பட்டுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையரை நேரடியாக சாட்சியாக விசாரிப்பதில் எந்த உண்மையும் வெளிவரப்போவதில்லை.

மேலும் நீதிமன்ற ஆணையாளர் நெற்குப்பை கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள மேற்படி அறிக்கையில் தாவா சொத்தின் வடபகுதியில் பிரதிவாதியே 27 X 10.75 அடிகள் நீள அகலத்தில் ஆக்கிரமித்து தார்சு கெட்டிக்கட்டிடம் கட்டியுள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் தாவா சொத்தில் மொத்த விஸ்தீரணம் 4.34 செண்டில் பிரதிவாதி சுமார் 1-1/4 செண்டிற்கு கட்டிடம் கட்டியுள்ளதுடன் ஆக மொத்தம் 2 செண்டிற்கு மேல் ஆக்கிரமித்துள்ளார். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எவ்விதமான சந்தேகத்திற்கு இடமான (ambiguity) வாசகமும் இல்லாத நிலையில் நீதிமன்ற ஆணையரை நீதிமன்றத்தில் நேரடியாக விசாரிக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை.

தாவா மனுவும் நீதிமன்ற ஆணையரை நேரடியாக விசாரிக்க அனுமதி கோர வேண்டிய சட்டப்பிரிவான சிபிசி.ஆர்டர் 26 ரூல் 10(3) படி மனு தாக்கல் செய்யாமலும், அதற்கான குறிப்பிடப்பட்ட காரணங்களை கூறாமலும் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும். எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**5.** இருதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6.** நீதிமன்ற ஆணையரை பிரதிவாதி தரப்பில் விசாரிக்கவேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர் விளம்புகை மற்றும் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் வழக்குப்படி பிரதிவாதி வாதியின் இடத்தில் 10 அடி உயரத்திற்கு கட்டி கட்டிடம் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அதை அப்புறப் படுத்தவேண்டும் எனவும் பரிகாரம் கேட்டுள்ளார். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு தல விசாரணை செய்து அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை பார்வையிடும்போது தாவா சொத்தில் உள்ள அமைப்புகளை குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் கோருவதுபோல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையும், வரைபடமும் முரண்பட்டு இருப்பதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் எவ்வகையில் முரண்பட்டுள்ளது என்பதை மனுதாரர் தரப்பில் தெளிவாக்கப்படவில்லை. எனவே நீதிமன்ற ஆணையரை சாட்சியாக விசாரிக்கவேண்டிய அவசியமும் எழவில்லை. எனவே இந்த மனுவானது மனுதாரர் தரப்பில் காலம் கடத்தும் நோக்கத்துடன் இம்மனுவை அனுமதிப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லாத நிலையில் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டியதாக உள்ளது.

**7.** முடிவாக, இந்த மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2023-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
சிவகங்கை

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில்

சாட்சி மற்றும் சான்றாவணம் - இல்லை

சார்பு நீதிபதி,
சிவகங்கை

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2023.10.10 17:19:57 +0530

Subordinate Court, Sivagangai
IA.No3/2023 in OS.No.98/2018
**Draft/Fair/Order**
10.10.2023